திருமோகூர்

ஸ்ரீ காளமேகப்பெருமாள் கோவில் வரலாறு

தேவஸ்தான வெளியீடு

1963.

MADRAS RECORD OFFICE
MADRAS

ஸ்ரீ

மோகன க்ஷேத்திரம் என வழங்கும்

ஸ்ரீ காளமேகப்பெருமாள் கோவில் வரலாறு

அரங்காவலர்கள் :

1. திரு. K. லக்ஷ்மிநரசிம்மன், B.Sc., B.L.,
தர்மகர்த்தா தலைவர், அட்வகேட், மதுரை.

2. ,, P. P. A. கண்ணன் சின்னன் அம்பலம்,
தர்மகர்த்தா, நிலக்கிழார், கொடிக்குளம்.

3. ,, R. M. செண்பகம் சேர்வை,
தர்மகர்த்தா, மதுரை.

திரு. M. குருநாதன்,
நிர்வாக அதிகாரி.

தேவஸ்தான வெளியீடு

உரிமை செய்யப்பட்டது] [விலை 35 புதுக்காசு

111812

O22:38.21192.TM
N64

திருச்சிராப்பள்ளி தமிழ்ப் புலவர்
வரலாற்றுச் செல்வர் - புலவர்மணி, ஆராய்ச்சிமணி
திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்
எழுதப்பெற்றது.

அணிந்துரை

திருமோகூர் என்பது, ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்றுத் திகழும் நூற்றெட்டுத் திவ்விய தேசங்களுள் ஒன்று. நம்மாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் இதனைப் பாசுரம் பாடிச் சிறப்பித்துள்ளனர்.

இங்கு எழுந்தருளி விளங்கும் எம்பெருமானுக்கு **ஸ்ரீகாளமேகப் பெருமாள்** எனப் பெயர். "தாளதாமரைத் தடமணி வயல் திருமோகூர்... காளமேகத்தையன்றி மற்றொன்று இலம் கதியே" என்பது நம்மாழ்வார் பாசுரம்.

கறுத்துத் திரண்டு கவிந்தெழுந்து மழைபொழியும் **காளமேகம்** போல, ஆச்ரிதர்கள் அனைவரும் மகிழ்ந்து உய்யும்படி அருள் மழை பொழியும் காரணம் பற்றி, இங்குள்ள பெருமாளுக்கு காளமேகப் பெருமாள் என்று பெயர் அமைந்தது.

முன்னொரு காலத்தில், திருப்பாற்கடலில் வெளிப்பட்ட அமிர்தத்தினைத் திருமால் **மோகினி வடிவம்** கொண்டு வந்து, இங்குத் தேவர்களுக்குப் பங்கிட்ட காரணத்தால், இந்த ஸ்தலம் **மோகூர்** மோகன க்ஷேத்திரம், மோகனபுரம் எனப்பெயர் பெறுவதாயிற்று. இவ்வரலாற்றினை "நல்லமரர் தீமை செய்யும் வல் அசுரரை அஞ்சிச் சென்று அடைந்தால், **காமரூபம்** கொண்டு எழுந்து அளிப்பான் திருமோகூர்" எனத் திருவாய்மொழி குறிப்பிடுகிறது.

இதற்குச் சான்றாக, இங்குள்ள தீர்த்தம் திருப்பாற்கடல்-க்ஷீராப்தி எனப்படும். மேலும் திருப்பாற்கடலிற்போல இங்கும் பெருமாள் பாம்பணையிற் பள்ளிகொண்டிருக்கும் திருக்கோலத்தைக் காணலாம். **"படர் கொள் பாம்பணை பள்ளிகொள்வான் திருமோகூர்"** என்பர் நம்மாழ்வார்.

இத்தகைய சிறந்த இத்திவ்ய தேசம் பற்றிய தலவரலாற்றை வெளியிடத் **தேவஸ்தானத்தார்** முன்வந்தமை, மிகவும் மகிழ்ச்சி தருகின்றது. இந்நூலைப் பக்தர்கள் பலரும் படித்துப் பயன் எய்துவார்களாக!

Fort St. George
MADRAS.
5—6—64

எம். பக்தவத்சலம்
Chief Minister of Madras.

முன்னுரை

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்பர் ஆன்றோர். தென்னாட்டில் கண்ணைக் கவரும்படியான பலகோயில்கள் உள்ளன. அவைகளில் மதுரை ஜில்லா, மதுரை தாலூகாவில் யானைமலைக்குப் பக்கத்தில் மோகன க்ஷேத்திரம் என்னும் திருமோகூர்க் கோயில் உள்ளது. திருமாலுக்குரிய 108 திருப்பதிகளுள் ஒன்று. நம்மாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்றது.

கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்து கொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை (Hindu Religious and Charitable Endowments) மதுரை உதவி கமிஷனர் உயர்திரு. **M. சூரியராஜ்** B. A., B. L., அவர்களின் ஆணைப்படி இவ்வரலாறு மோகனக்ஷேத்திர மாகாத்மியம் என்னும் நூலைத் தழுவிச் சுருக்கமாக எழுதப்பெற்றது.

பழங்காலச் சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், தலவரலாறுகள் வரச் செய்வதிலும், சமய உண்மைகளைப் பரப்புவதிலும், கோயில் திருப்பணிகளைச் செய்விப்பதிலும் தற்போதுள்ள அறநிலையத் தலைவர் உயர்திரு. **M. S. சாரங்கபாணி முதலியார்**, B. A., B. L., அவர்களும் மற்றையோர்களும் ஆவனசெய்து வருகிறார்கள். அவர்களுக்கு நமது நன்றி.

இதில் கோயில் விளக்கமும், தலப் பெருமைகளும், புராண வரலாறுகளும், கல்வெட்டுச் செய்திகளும், துதிப்பாடல்களும் சேர்க்கப்பெற்றுள்ளன.

அன்பர்கள் படித்து ஸ்ரீ காளமேகப்பெருமாள் திருவருளைப் பெறுவார்களாக.

திருச்சிராப்பள்ளி
11—11—63

R. பஞ்சநதம் பிள்ளை.
தமிழ்ப்புலவர்.

உள்ளடக்கம்

		பக்கம்
1.	கோவிலும் இருப்பிடமும்	... 1
2.	கோவிலின் அமைப்பு	... 4
3.	கோவிலின் படம்	... 7
4.	மூர்த்திகளின் பெயர்கள்	... 8
5.	தீர்த்தங்கள்	... 8
6.	சுற்றுக் கோவில்கள்	... 8
7.	தலப் பெருமைகள்	... 10
8.	திருப்பணிகள்	... 12
9.	சிற்பங்கள்	... 13
10.	தினப்பூஜையும் திருவிழாக்களும்	... 14
11.	கல்வெட்டுக்கள்	... 16
12.	வருமானமும் சொத்துக்களும்	... 20
13.	நிர்வாகம்	... 21
14.	புராண வரலாறுகள்	... 21
15.	துதிப்பாடல்கள்	... 24

கோவில் விளக்கம்

கோவில் — ஸ்ரீ காளமேகப்பெருமாள் கோவில் (மோகன க்ஷேத்திரம்)

இடம் — திருமோகூர்.

மூலவர் — ஸ்ரீ காளமேகப்பெருமாள்.

கோலம் — நின்ற திருக்கோலம் — பள்ளிகொண்ட கோலம்.

உற்சவர் — திருமோகூர் ஆப்தன்.

தாயார் - ஸ்ரீ மோகனவல்லி.

விமானம் — சதுர்முக விமானம்.

தீர்த்தம் — திருப்பாற்கடல்.

மரம் — வில்வமரம்.

மதுரை ஜில்லா — மதுரை தாலூகாவில் யானைமலைக்குப் பக்கத்தில் மதுரையிலிருந்து 7½ மைல் தூரத்தில் கோவில் உள்ளது. 108 திருப்பதிகளுள் ஒன்று. நம்மாழ்வாரால் மங்களா சாசனம் செய்யப்பெற்றது.

ஸ்ரீ காளமேகாய நம:

ஸ்ரீ காளமேகப்பெருமாள் (மூலவர்)

திருமோகூர்

ஸ்ரீ மோகன க்ஷேத்திரம் என வழங்கும்

திருமோகூர்க் கோவில் வரலாறு

"தொண்டீர் வம்மின் நம்சுட ரொளியொரு தனிமுதல்வன்
அண்ட மூவுலகளந்தவன் அணி திருமோகூர்
எண்டிசையும் ஈன்கரும்பொடு பெருஞ்செந் நெல்விளையக்
கொண்ட கோயிலை வலஞ்செய்திங் காடுதுங் கூத்தே"

(நம்மாழ்வார்)

1. கோவிலும், இருப்பிடமும்

ஆதி அந்தங் கடந்த பரம்பொருளாகிய இறைவன் உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் தன் உயர்ந்த நிலையிலிருந்து இறங்கி இப்பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளியிருந்து, தன்னை வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்து வருகிறான். அத்தகைய சிறந்த இடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுதும் பால் பரவியிருந்த போதிலும், மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தாலும் பளிங்குக்கல்லின் (Lens) மூலமே கிரணங்கள் வெளிப்படுவது போலவும், நிலத்துக்கடியில் நீர் இருந்த போதிலும், தோண்டிய இடத்தில் தானே நீர் தோன்றுவது போலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்த போதிலும் பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்வான்.

"இருஞ்சுரபிக் கெங்கும் உருக்காண ஒண்ணாத
பால்முலைப்பால் விம்மி ஒழுகுவது போல
வெளிப்பட் டருள்வன் அன்பர்க்கே"

அடியார்கள் எந்தெந்த உருவத்தை நினைந்து வழி படுகிறார்களோ அந்தந்த உருவத்தில் பரமன் தோன்றிக் காட்சி கொடுத்து அருளுகின்றான்.

"ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்"

(அப்பர்)

"தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமருகந்த தெப்பேர் மற்றப்பேர்—தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்திமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியானும்"

(பொய்கையாழ்வார்)

இத்தகைய பரம்பொருள் ஆலயங்களில் சிவபெருமானாகவும், திருமாலாகவும், பிறமூர்த்திகளாகவும் காட்சி தந்து அருள்செய்கிறான்.

மேலும் பரம்பொருளாகிய இறைவனுக்கு பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்றும் ஐந்து வகை நிலைகள் உண்டு. இவற்றுள் பரத்வம் என்பது பரம பதத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை. வியூகமாவது திருப்பாற் கடலில் எழுந்தருளியிருக்கும் நிலை. விபவம் என்பது ராமகிருஷ்ணாதி அவதாரங்கள். அந்தர்யாமித்வம் என்பது சராசரப் பொருள்களாகிய இயங்கும் பொருள்கள் – இயங்காப் பொருள்கள் யாவற்றுள்ளும் எள்ளினுள் எண்ணெய் போல் மறைந்திருப்பது. அடியார்களின் மனதில் வீற்றிருத்தலும் இதில் அடங்கும். அர்ச்சை என்பது விக்கிரக ரூபங்களில் ஆவிர்ப்பவித்தல். "வைகுந்தமேற் கொண்டிருந்தோர் வடிவைந்தின் வாழுமிடம்" என்று பிள்ளைப்பெருமான் ஐயங்கார் கூறுகிறார். இந்த ஐந்துவகை நிலைகளில் அடியார்களுக்குக் காட்சிக்கெளியதாய், கோவில்களில் உள்ள மூர்த்திகளில் அருட்கோலத்துடன் விளங்குவதாகிய அர்ச்சை நிலையே சிறந்ததாகக் கூறுவர் சான்றோர்.

"செய்ய பரத்துவமாய்ச் சீரார் வியூகமாய்
துய்ய விபவமாய்த் தோன்றிவற்றுள்—எய்துமவர்க்கு
இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிதென்ருன்
பன்னுதமிழ் மாறன் பயின்று"

(திருவாய்மொழி நூற்றந்தாதி)

இந்த அர்ச்சை நிலையில் திருமால், "நீடியமால் நின்ருன் இருந்தான் கிடந்தான்" என்றும், "புளிங்குடிக் கிடந்து, வரகுணமங்கையிருந்து, வைகுந்தத்துள் நின்று" என்றும் முன்னோர் கூறியபடி நின்ற திருக்கோலம், அமர்ந்த திருக்கோலம், பள்ளிகொண்ட திருக்கோலங்களைக் கொண்டு ஆங்காங்கு பல தலங்களில் எழுந்தருளியுள்ளார். திருமோகூராகிய இத்தலத்தில் மூலவர் நின்ற கோலத்திலும், பள்ளிகொண்ட கோலத்திலும் காட்சி தருகிருர்.

பெறுதற்கரிய மக்கட்பிறப்பைப் பெற்றவர் அனைவரும் பரம்பொருளாகிய பரந்தாமனை அன்பினல் வழிபட்டு அவன் நன்னெறியில் ஒழுகி அவனருளைப் பெற முயலவேண்டும்.

தென்னுடாகிய தமிழ்நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல உள்ளன. அவை சிவன் கோவில்கள், வைணவக் கோவில்கள், முருகன் கோவில்கள் முதலாயின. அவைகளுள் திருமாலுக்குரிய நூற்றெட்டுத் திருப்பதிகளுள் திருமோகூர்க் கோவில் ஒன்ருகும்.

தண்ணூர் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டில் - சந்தனப் பொதியமும், தண்குமரித் துறையும், புண்ணியப் பொருநையும், தமிழ் கண்டதோர் வையையும் தன்னகத்துடைய நன்னுட்டில், மதுரை ஜில்லா - மதுரை தாலூகாவில், நாட்டின் தலைநகராகிய மதுரையம்பதிக்கு வடகிழக்கில், திருவாதவூர் செல்லும் மார்க்கத்தில் யானைமலை ஒத்தக்கடைக்குப் பக்கத்தில் மதுரையிலிருந்து $7\frac{1}{2}$ மைல் தூரத்தில் திருமோகூர் என்னும் சிறந்த தலம் உள்ளது. இது தென் கலைக்கோயில் நம்மாழ்வாராலும், திருமங்கையாழ்வாராலும், மங்களாசாசனம் செய்யப்பெற்றது. மோகன க்ஷேத்திரம் என்றும், மோகன புரம் என்றும் பெயர்கள் வழங்கும். திருமால் மோகினி வடிவங்

கொண்டு தேவர்களுக்கு அமிர்தத்தைப் பங்கிட்டுக் கொடுத்ததாலும், நகரத்தை அமைத்த தேவதச்சனை விசுவகர்மாவையும், மற்றையோரையும் பிரமிக்கச் செய்ததாலும் இப்பெயர்கள் ஏற்பட்டதாகக் கூறுவர். தாழைகள் மிகுந்துள்ளதால் கேதகிவனம் என்றும் பெயர் பெறும்.

இவ்வூர் மைனர் பஞ்சாயத்து போர்டு ஆட்சியில் நடைபெறுகிறது. தபால் நிலையம், கூட்டுறவு சங்கம், சமுதாயத் திட்டம் முதலிய நிலையங்களும், ரேடியோ, குழாய்த் தண்ணீர், மின்சார வசதிகளும் உள்ளன. ஜில்லா போர்டைச் சேர்ந்த தொடக்கநிலைப் பள்ளியும், நகரத்தார் விடுதியும், ராமானுஜ கூடமும் இருக்கின்றன. ஜனத்தொகை சுமார் 2000. தாள தாமரைக் கண்மாயும், தடமணிவயல்களும் சூழ்ந்துள்ளன. மதுரையிலிருந்து ஒத்தக்கடை வழியாக மோட்டார் (Bus) வண்டிகள் மூலமாய் இத்தலத்தை அடையலாம். இங்கிருந்து கிழக்கே எட்டு மைல் தூரத்தில் மாணிக்கவாசகர் அவதரித்த திருவாதவூர் உள்ளது.

2. கோவிலின் அமைப்பு

ஆனைமலையை அடுத்துக் கீழ்த்திசையில் நீர்வளம் மிகுந்த சோலை ஒன்றுள்ளது. மாலிருஞ்சோலை என்றும், துங்கவனம் என்றும் சொல்லப்படும். நீரோடைகளும் வாவிகளும் சூழ்ந்துள்ளது. அந்த வனத்தில் ஜாதி, வகுளம், சுரபுன்னை, வாழை, தென்னை முதலிய மரங்களும், தாழை, அசோகு, சம்பகம், சுரபுன்னை, மல்லிகை, ஜெவந்தி முதலிய மலர்களும் நிறைந்து நறுமணத்தை வீசிக்கொண்டு தேவேந்திரனுடைய நந்தவனத்துக் கொப்பான இன்பத்தைக் கொடுத்துக்கொண்டு விளங்குகிறது. பலவகைப் பறவை இனங்களும் இனிய ஓசைகளால் பாடிக்கொண்டிருக்கும் இத்தகைய சோலைகளுக்கு நடுவில் திருமோகூர்க் கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

கோவிலுக்கு முன்னே ஓர் நுழைவாயில் உள்ளது. கோபுரமில்லை. இதைக் கடந்து உள்ளே சென்றால் கம்பத்தடி

மண்டபம் உள்ளது. இம்மண்டபத் தூண்களில் நான்கு யாளிகளின் சிலைகளும், பெரிய மருது, சின்ன மருது என்பவர்களின் உருவங்களும் அமைக்கப் பெற்றுள்ளன. தென்புறத்தில் கல்யாண மண்டபமும், வடபுறத்தில் பாம்பணைப் பள்ளிகொள்வான் சந்நிதியுமுள்ளது. பள்ளிகொண்ட மூலவரின் திருவடிகளுக்குப் பக்கத்தில் இரு தேவிமார் பெருமாளைத் துயிலெழுப்பும் நிலையில் பிரார்த்தித்த வண்ணம் அமர்ந்துள்ளார்கள்.

"கிடந்தநாள் கிடந்தாய் எத்தனைகாலம் கிடத்தி
உன் திருவுடம் பசைய
தொடர்ந்து குற்றேவல் செய்து தொல்லடிமை
வழிவரும் தொண்டரோர்க் கருளி
தடங்கொள் தாமரைக் கண்விழித்து நீயெழுந்துன்
தாமரை மங்கையும் நீயும்
இடங்கொள் மூவுலகும் தொழ விருந்தருளாய்
திருப்புளிங் குடிக் கிடந்தானே."

(நம்மாழ்வார்)

சந்நிதியில் வில்வமரம் தலவிருட்சமாயுள்ளது. இம்மரம் ஆதியில் கிருதயுகத்தில் திவ்ய விருட்சமாகவும், திரேதாயுகத்தில் வன்னி விருட்சமாகவும், துவாபரயுகத்தில் வில்வ விருட்சமாகவும், கலியுகத்தில் அரசவிருட்சமாகவும் இருப்பதாக புராணத்தில் சொல்லப்படுகிறது.

கம்பத்தடி மண்டபத்தை அடுத்து உள் கோபுர வாயில் 3 கண்களுடன் விளங்குகிறது. இதைக் கடந்து சென்றால் தென்புறத்தில் மடைப்பள்ளியும், உடையவர் சந்நிதியும் ஆழ்வார்கள், மணவாளமாமுனி, ஆஞ்சநேயர் சந்நிதிகளும், மேற்கில் ஸ்ரீ மோகனவல்லித்தாயார் சந்நிதியும், ஸ்ரீ சக்கரத்தாழ்வார் சந்நிதியும், வடபுறத்தில் ஸ்ரீ ஆண்டாள் சந்நிதியும், தாண்டவ நிலையிலுள்ள ஸ்ரீ கண்ணன் சந்நிதியும் உள்ளன. நடுவில் உள்ள கருட மண்டபத்தில் கருடன் பெரிய திருவடியின் சந்நிதி மூலவரை நோக்கியுள்ளது. கருட மண்டபத்துத் தூண்களில் மன்மதன்–ரதி–சீதா ராமர் இலக்குமணர்–ஆஞ்சநேயர் முதலியவர்களின் சிற்பங்கள் அழகாய் அமைக்கப்பெற்றுள்ளன.

கருடமண்டபத்தைக் கடந்து உள்ளே சென்ருல் மகா மண்டபம் கொண்ட கோயில் உள்ளது. இதில் பள்ளியறையும், கருவூலமும், சேனே முதலியார் சந்நிதியும் உள்ளன. மூல ஸ்தானத்தில் ஸ்ரீ தேவி பூதேவிகளுடன் ஸ்ரீ காளமேகப்பெரு மாள் மூலவராக நின்ற கோலத்தில் காட்சியளிக்கிருர். மூலவர் விமானம் சதுர்முக விமானம் எனப்படும். ஸ்ரீ தேவி பூதேவி களுடன் நீருண்ட மேகம் போன்ற திருமேனியையுடையராய்ச் சங்குசக்ர கதாதாரராய் எல்லோருக்கும் அவரவர் கேட்ட வர மளிப்பவராய் எழுந்தருளியிருக்கும் விஷ்ணுவுக்கு தேவர்கள் கருணே மழை பொழியும் நீருண்ட மேகம் போன்ற திரு மேனியை உடையராயிருக்கும் காரணத்தையிட்டே காளமேகப் பெருமாள் என்று திருநாமம் சாத்தி சதாகாலமும் சேவித்து வந்தார்கள். (க்ஷேத்ரமகாத்மியம்) மூலவருக்கு முன்னே உற்சவர் எழுந்தருளியிருக்கிருர். திருமோகூர் ஆப்தன் — குடமாடு கூத்தன் – தயரதன் பெற்ற மரகதமணி – சுடர்கொள் சோதி என்று போற்றப்படுகிருர். கண்ணன் கூத்தன் கோவலஞக விளங்குகிருன். இரண்டாம் பிரகாரத்தில் தென் மேற்கு மூலேயில் கொத்தள முனீஸ்வரர் கோயிலும், வட புறத்தில் பரமபத வாசலும் உள்ளன. கோவிலுக்குள் இரண்டு பிரகாரங்களும் வெளியில் ஓர் வீதியும் உள்ளன. வாயிலுக் கெதிரில் 16 கால் மண்டபம் உள்ளது. வெளி மதிலுக்கு வடக்கில் பெரிய திருப்பாற்கடலும், சிறிய திருப்பாற்கடலு மாகிய இரண்டு குளங்கள் உள்ளன. பெரிய திருப்பாற்கடலில் தெப்ப விழா நிகழும்.

பாற்கடலேக் கடையும்பொழுது ஒரு துளி இந்தத்தலத் தில் விழுந்து தடாகமாயிற்று. இந்தத் தடாகத்திற்கு பாற்கடல்-க்ஷீராப்தி என்று பெயர் ஏற்பட்டது. இதற்குத் தெற்கில் தான் பகவான் பாம்பணேயில் பள்ளிகொண்டிருக் கிருர். மோகன க்ஷேத்திரம் பாற்கடலுக்கும் ஸ்ரீ காளமேகப் பெருமாள் பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பகவானுக்கும் சமானமாகச் சொல்லப்பட்டுள்ளது. கோவிலின் சுற்றளவு கிழமேலடி 412. தென்வடலடி 272. கோவிலின் அமைப் பைக் காட்டும் படம் தனியே உள்ளது.

3. கோவிலின் படம்

தென் வடலடி 272



எண்கள் விளக்கம்:

1. முன் வாயில்
2. கம்பத்தடி மண்டபம்
3. கல்யாண மண்டபம்
4. வில்வமரம்
5. ஸ்ரீ பள்ளிகொண்ட பெருமாள் சந்நிதி

5a. வாகன அறை

6. உள் கோபுரவாயில் (3 கண்கள்)
7. மடைப்பள்ளி
8. உடையவர் சந்நிதி
9. ஆழ்வார்கள் – மணவாளமாமுனி, ஆஞ்சநேயர் சந்நிதி
10. ஸ்ரீ மோகனவல்லித்தாயார் சந்நிதி
11. ஸ்ரீ சக்கரத்தாழ்வார்
12. கொத்தளமுனீஸ்வரர்
13. ஸ்ரீ ஆண்டாள் சந்நிதி
14. பரமபத வாசல்
15. ஸ்ரீ கண்ணன் சந்நிதி (தாண்டவம்-கூத்தாடி)
16. கருடன் சந்நிதி (பெரிய திருவடி)
17. கருடமண்டபம் - மன்மதன் — ரதி - சீதாராமர் - இலக்குமணர் – ஆஞ்சநேயர் (தூண்களில்)
18. சேனை முதலியார்
19. கருவூலம்
20. பள்ளியறை
21. திட்டிவாசல்
22. மகாமண்டபம் (கொண்ட கோயில்)
23. மூலவர் – ஸ்ரீ காளமேகப் பெருமாள் உற்சவர் - (திருமோகூர் ஆப்தன்)
24. பெரிய திருமண்டபம்
25.
26. 16 கால் மண்டபம்

4. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்தின் மூலவர்-ஸ்ரீகாளமேகப் பெருமாள் நீருண்ட காளமேகம் போன்ற திருமேனியைக் கொண்டு கருணை மழையைப் பொழிவதால் இப்பெயர் ஏற்பட்டது.

உற்சவருக்குத் திருமோகூர் ஆப்தன், குடமாடு கூத்தன், தயரதன் பெற்ற மரகதமணி, சுடர்கொள் ஜோதி முதலிய பெயர்கள் வழங்குகின்றன. பள்ளிகொண்ட பெருமாள், பாம்பணைப் பள்ளிகொள்வானுக விளங்குகிருர். தாயாருக்கு மோகனவல்லி, திருமோகூர் வல்லி, மேகவல்லி என்னும் பெயர்கள் வழங்குகின்றன.

5. தீர்த்தங்கள்

திருப்பாற்கடல்:- பாற்கடலின் ஓர் துளி இத்தலத்தில் விழுந்து இரண்டு குளங்களாக உள்ளன. அவை பெரிய திருப்பாற்கடல்; சிறிய திருப்பாற்கடல் என்பன. பெரிய குளத்தில் தெப்பவிழா நிகழும். புஷ்கரம் முதலிய தீர்த்தங்களும், கங்கை முதலிய நதிகளும் திருப்பாற்கடலில் சாநித்ய மடைகின்றன. பக்கத்தில் கோவிலுக்குள் பகவான் பாம்பணையில் பள்ளிகொண்டிருக்கிருர். மோகனக்ஷேத்திரம் பாற்கடலாகவும், ஸ்ரீ காளமேகப் பெருமாள் பள்ளிகொண்ட மூர்த்தியாகவும் புகழப் படுகிருர்கள்; (பாற்கடல் என்பது தூயமனதில் இறைவன் உறைவான் என்பதைக் காட்டுகிறது—திருக்கோவில்) தாள தாமரைக் கண்மாய் என்னும் தீர்த்தம் கோயிலுக்குப் பக்கத்தில் உள்ளது.

6. சுற்றுக்கோவில்கள்

நரசிங்கப்பெருமாள் கோவில்:- அத்திகிரி என்னும் யானைமலையில் உள்ளது. புலஸ்திய முனிவர் வழிபட்டது. கல்வெட்டுக்களில் பெருமாளுக்கு நரசிங்கப் பெருமானடிகள் என்றும், நரசிங்க ஆழ்வார் என்றும், ஊருக்கு நரசிங்க மங்கலம் என்றும் பெயர்கள் கூறப்படுகின்றன.

வேத நாராயணப்பெருமாள் கோவில் அருகே ஸ்ரீவிநாயகர் கோவில், மலைச்சுவாமி கோவில், ஸ்ரீ வீரணசுவாமி கோவில், ஆயி கோவில், ஸ்ரீ கருப்பண சுவாமி கோவில், ஸ்ரீ அய்யன் கோவில்.முதலிய கோவில்கள் உள்ளன.

கொடிக்குளம்–மைனர் பஞ்சாயத்து மின்சாரம் பொறுத்தப் பட்டிருக்கிறது. கோவாபரேடிவ் சொஸைட்டி, தபால் நிலையம், ஜனத்தொகை 3000, உயர்நிலைப்பள்ளி ஆகியவைகள் உள்ளன.

கோயிலுக்கு பின்னணியாக மலை வானத்தை நோக்கி சற்று தூரத்தில் கம்பீரமாக நிற்கின்றது. மலைமேல் பஞ்சவர் படுக்கை, சுனை முதலியன இருக்கின்றன.

யானை மலையில் மலைக்கு மேல்புறம் நரசிங்கமும் கீழ் புறம் கொடிக்குளமும், மிக்க அழகான சூழ்நிலையில் பசிய வயல்களுக்கிடையே அமையப்பெற்றிருக்கிறது. தூரம் சுமார் $2\frac{1}{2}$ மைல் - தினப் பூஜைகள் செவ்வனே நடந்தேற ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இக்கோவில் நாட்டான்.

வேதநாராயணப் பெருமாள் கோவில்: இதுவும் யானை மலையில் வடபுறம் கீழ் பகுதியில் வீரதீரத்திற்கு பெயர் பெற்ற நாட்டம்பலகாரர் ஆறுகரைக் கள்ளர்கள் வாழும் கொடிகுளம் என்னும் சிற்றூருக்கு அருகே அமைந்துள்ளது. அவ்விடத்தில் பிரமதீர்த்தம் என்னும் சிறந்த தீர்த்தம் உள்ளது. பிரமனுல் ஏற்படுத்தப்பட்டது. இதற்குப் பிரமசரஸ் - பத்ம தடாகம் – மகாவாவி–சரஸ்வதி தீர்த்தம், கேதகி தீர்த்தம் (தாழைக்குளம்) முதலிய பெயர்களும் வழங்கும். இவ்விடத்தில் திருமால் ஒரு காலத்தில் மதுகைடபர்கள் என்னும் அசுரர்களைக் கொன்ற தாகச் சொல்லப்படுகிறது. பிரமதீர்த்தத்துக்குப் பக்கத்தில் பாபநாசனம், ஸ்வர்க்கத் துவாரம், நரகாந்தகம், பவமானம் என்னும் தீர்த்தங்கள் உள்ளன. திருமோகூர்க் கோவிலுக்குப் பக்கத்தில் 18-ம் படிக் கருப்பண்ணசாமி கோவில், வீரபத்திரர் கோவில் ராக்காயி அம்மன் கோவில், இருளப்பசாமி கோவில், வரத விநாயகர் கோவில் முதலிய கோவில்களும் உள்ளன.

7. தலப் பெருமைகள்

இத்தலம் இயற்கை வளமுள்ள இடத்தில் அமைந்துள்ளது. சுற்றிலும் வயல்களும், ஓடைகளும், வாவிகளும், சோலைகளும் சூழ்ந்துள்ளன. குறிஞ்சிப் பகுதியாகிய யானைமலையும், மருதப்பரப்பாகிய வயல்களும் அடுத்துள்ளன. மாலிருஞ்சோலை என்றும், துங்கபவனம் என்றும் சொல்லப்படும். இத்தலத்தின் இயற்கை வளங்களை நம்மாழ்வார் தமது பாசுரங்களில் அழகாகப் பின்வருமாறு எடுத்துக்காட்டுகிறார்.

"தாளதாமரைத் தடமணி வயல் திருமோகூர், நான்மறை வாணர்கள்வாழ் மோகூர், எண்டிசையும் ஈன் கரும்பொடு செந்நெல் விளையக் கொண்ட கோயில், தண்பணை வளவயல் சூழ் திருமோகூர், உயர்கொள் சோலை ஒன் தடமணி ஒளி திருமோகூர்" என்பன. திருமாலின் குணவிசேடங்களைக் குறித்து மூவுலகளித்துழல்வான் என்றும், தேவரும் முனிவரும் தொடரப் பாம்பணைப் பள்ளிகொள்வான் என்றும், அசுரரைத் துணிக்கும் வல்லரட்டன் என்றும், காமரூபங்கொண்டு எழுந்தளிப்பான் என்றும் காட்டியுள்ளார். "சீராரும் மாலிருஞ்சோலைத் திருமோகூர்" என்று திருமங்கையாழ்வார் போற்றுகிறார்.

இத்தலத்தில் ஸ்ரீ காளமேகப் பெருமாள் நின்ற கோலத்திலும், பாற்கடலின் பக்கத்தில் பள்ளிகொண்ட கோலத்திலும், அடியார்களின் உள்ளத்தில் அமர்ந்த கோலத்திலும் காட்சி தருகிறார். மோகினி வடிவங்கொண்டு தேவர்களுக்கு அமிர்தம் கொடுத்த இடம் என்றும், வழிக்குத் துணையாய் வருமவர் வாழுமிடம் என்றும், வழித்துணையாம் காளமேகம் என்றும் கூறப்படுகிறது. நம்மாழ்வார் — திருமங்கையாழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்றது. மணவாள மாமுனிகளாலும், பிள்ளைப்பெருமாள் ஐயங்காராலும் புகழப்பெற்றது. மோகன க்ஷேத்திர மகாத்மியத்தை உடையது. பிரமதீர்த்தம், திருப்பாற்கடல் முதலிய தீர்த்தங்களையுடையது. மூர்த்தி-தலம்-தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. இத்தலத்தைச் சூழ்ந்துள்ள தீர்த்தங்களிற் படிந்து பெருமாளை வழிபடுவோர்,

கங்கை, யமுனை, சரஸ்வதி முதலிய நதிகளில் ஸ்நானம் செய்தால் ஏற்படும் புண்ணியத்தைப் பெறுவார்கள். பாவத்தால் உண்டாகக் கூடிய எல்லாத் துன்பங்களும் நோய்களும் நீங்கிச் சுகம் பெறுவார்கள். பிரமன், புலஸ்தியன், ஆதிசேடன், கருடன் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்ற பதி. பிரமனால் அமைக்கப் பெற்ற சதுர்முக விமானத்தையுடையது.

திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமனை பிரமன் முதலிய தேவர்கள் அர்ச்சை நிலையில் ஆராதிக்க வேண்டிப் பிரார்த்திக்க, அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கிப் பெருமாள் மோகன க்ஷேத்திரத்தில் ஸ்ரீ காளமேகப் பெருமாளாக நின்ற கோலத்தில் எழுந்தருளித் தன்னைச் சேவிக்க வரும் அடியார்களுக்குக் கருணை மழையைப் பொழிந்து வருகிறார். அவர் காட்சி தருந் தோற்றம் பின்வருமாறு வர்ணிக்கப்பெற்றுள்ளது.

"அப்போது கெருடாரூடராய் மின்னலுடன் கூடிய மேகத்துக்கொப்பான திருநிறத்துடனும், திருப்பீதாம்பரத்துடனும் வனமாலைகளால் அழகிய திருமேனியுடனும், மேரு மலையின் சிகரத்துக்கொப்பான பெரிய திருவடியின் திருத்தோளில் நீருண்ட மேகம் போல் வீற்றிருந்து சூரியகாந்திக் கொப்பான கிரீடத்தால் விளங்கும் திருமுக மண்டலத்தையுடையவராயும், ஹாரம்பாதச் சிலம்பு தோள்வளை கங்கணம், மோதிரம் இவைகளால் அலங்கரிக்கப்பட்டவராயும், நான்கு திருக்கைகளுடன் கூடியவராயும், கௌஸ்துப மாலையைக் கழுத்தில் அணிந்தவராயும், ஸ்வர்ணமயமான அரைஞாணையும் பூணூலையும் தரித்தவராயும், தன்னைச் சேவிப்பவர்களுக்கு அபூர்வமான தரிசனத்தை உடையவராயும், புருஷோர்த்தமராயும், கருணைக்கடலாயும், அன்றலர்ந்த தாமரைப் பூப்போன்ற திருக்கண்களும் கொடிபோல் நீண்ட புருவங்களும் கிருபையாகிற சமுத்திரத்திற் கட்டப்பட்ட அணைபோன்ற திருமூக்கும், காதுகளில் தொங்குகிற ரத்னமயமான குண்டலங்களினால் அலங்கரிக்கப்பட்டவராயும், மனோகரமாய் நீண்டு அதிக வாசனையுள்ள திருக்குழற்கற்றைகளுடனும், அழகிய பவளம்

போன்ற திலகத்துடனும், கோவைப்பழம் போன்ற திருவதரங்களுடனும், அமிர்தவர்ஷியான கடாட்சத்துடனும், பிரஜைகளின் மனதைக் கவரும் மந்தஹாசத்துடனும் கூடினவராயும், பிரளய கால சூரியனைப்போல காந்தியோடு விளங்கும் திருவாழி யாழ்வானை வலத்திருக்கையிலும், பதினாயிரம் பூரணச்சந்திரப் பிரகாசம் போல் விளங்கும் ஸ்ரீ பாசசன்யாழ்வானை இடத்திருக்கையிலும் ஏந்தியவராயும் எழுந்தருள்பவரான பகவானைத் தேவர்கள் சந்தோஷத்தாற் கலங்கிய கண்களுடன் கண்டு நமஸ்கரித்து எழுந்து நின்றார்கள்.

(க்ஷேத்திர மஹாத்மியம்)

8. திருப்பணிகள்

முன்னோர்கள் ஏற்படுத்திய கோவில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி பாதுகாத்து அவ்வப்பொழுது ஆவன செய்ய வேண்டும். புதியதோர் கோவிலை அமைப்பதைப் பார்க்கிலும் பழமையான கோவிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும் என்பர். "புதிதுறப்பணிகள் வேறு புரிவதின் பழயதொன்றை விதியுளிபுதுக்குவோர்க்கு மிகப் புண்ணியந்தான் எய்தும்" என்று ஆன்றோர் கூறியுள்ளார்.

இக் கோவிலில் அவ்வப்போது திருப்பணிகள் நடந்து வந்திருக்கின்றன. 1924-ம் ஆண்டில் கோயில் நிதியிலிருந்து செலவு செய்து திருப்பணிகள் நிறைவேறிக் கும்பாபிஷேகம் சம்ரோட்சணை செய்யப் பெற்றது. 1936-ம் ஆண்டில் நாட்டுக் கோட்டை நகரத்தார்களின் ஆதரவில் சுமார் ஒருலட்ச ரூபாய் செலவு செய்து கோவில் மண்டபங்கள், தளவரிசைகள் பழுது பார்க்கப்பெற்று சந்நிதிக் கதவுகள் புதுப்பிக்கப் பெற்றன. திருவாபரணங்களும், வெள்ளிப் பாத்திரங்களும் அமைக்கப் பெற்றன. பிறகு 20-5-58ல் கோயில் டிரஸ்டிகள், மதுரை சௌராஷ்டிர குலத்தார் இவர்கள் உபயத்தில் சுமார் ரூ. 2500 செலவு செய்து மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டன. தற்போது சர்க்கார் உதவிய (ரூ. 9000) ஒன்பதாயிரம் ரூபாய் தொகையைக் கொண்டு முன் வாயில், 16 கால் மண்டபம்,

உள் மண்டபங்கள் முதலியன புதுப்பிக்கப் பெற்றும், சுதை வேலைகள் செய்யப் பெற்றும் வருகின்றன. மேலும் பல திருப்பணிகள் நடைபெற வேண்டியிருக்கிறது.

9. சிற்பங்கள்

கோவிலும், மண்டபங்களும், மூர்த்திகளும் அழகிய சிற்பம் பொருந்தியவை. மூலவர் விமானம் சதுர்முக விமானம். மூலப்பெருமாள் நின்ற கோலமும், பள்ளிகொண்டவர் கோலமும், கண்ணனின் தாண்டவ கோலமும் நல்ல சிற்பம் பொருந்தியன. கம்பத்தடி மண்டபத் தூண்களில் யாளிகளின் உருவங்களும், சின்னமருது - பெரியமருது வீரர்களின் வடிவங்களும், கல்யாண மண்டபத்தில் சாமரை வீசும் இரு பெண்களின் உருவங்களும், கருட மண்டபத் தூண்களில் மன்மதன், ரதி, சீதாராமன், இலக்குமணன், ஆஞ்சநேயர் முதலிய சிலைகளும் அழகிய சிற்பத்திறனுடன் விளங்குகின்றன. மற்றும் சில தூண்களில் பூக்கள் - கொடிகள் முதலியன சித்திரிக்கப்பெற்றுள்ளன. சக்கரத்தாழ்வார், யோக நரசிம்மன் சிலைகள் கண்களுக்கு இனிமையாய் உள்ளன. பள்ளிகொண்ட பெருமாளின் திருவடிகளில் இரு தேவிகள் கையேந்திப் பிரார்த்திக்கும் நிலை அழகாய் அமைந்துள்ளது. ஆழ்வார்களும், பள்ளிகொண்ட பெருமாளும் கற்சிலைகளில் அழகாய் அமைக்கப் பெற்றுள்ளன. உலோகத்தாற் செய்யப்பெற்ற பெண் விளக்கேந்தி நிற்கும் 6 பாவை விளக்குகள் உள்ளன. மூலவர் சந்நிதியில் இரண்டும், பள்ளிகொண்ட பெருமாள் சந்நிதியில் இரண்டும், ஆண்டாள் சந்நிதியில் ஒன்றும், தாயார் சந்நிதியில் ஒன்றும் உள்ளன. உள் கோபுரம் மூன்று கண்களையுடையது. வெளிமதிலின் உட்புறத்தில் இரண்டு கொடுங்கைகள் உள்ளன. ஒன்றில் சுற்றி வரலாம். தேரடிக் கருப்பண்ண சுவாமிக்குப் பக்கத்தில் 18 படிகள் அமைக்கப் பெற்றுள்ளன. உள் மண்டபத்தில் கல்வெட்டுச் சிற்பங்கள் உள்ளன. பாற்கடல் தெப்பக்குளமும் அழகாய் அமைக்கப் பெற்றுள்ளது.

10. தினப் பூஜையும் திருவிழாக்களும்

இக் கோயிலில் தினந்தோறும் ஆறுகால பூஜைகள் பாஞ்சராத்திர ஆகமப்படி நடைபெறுகின்றன. காலை 7 மணிக்கு விஸ்வரூபமும், 8½ மணிக்குப் பொங்கல் காலமும், 12 மணிக்கு உச்சிக்காலமும், மாலை 5 மணிக்குமாலைப் பூஜையும் 6 மணிக்குச் சுற்றுக் கோயில் பூஜையும் இரவு 8 மணிக்குச் சம்பா காலமும் நிகழ்கின்றன. அந்தந்த பூஜை நேரங்களில் சென்று வழிபடுவதால் இம்மைக்கும் மறுமைக்கும் நலன்கள் உண்டு. ஸ்ரீ காளமேகப் பெருமாள் கருணை மழையைப் பொழியக் காத்து நிற்கின்றார்.

"வினையால் அடர்ப்படார் வெந்நரகில் சேரார்
தினையேனும் தீக்கதிக்கண் செல்லார்—நினைதற்
கரியானைச் சேயானை ஆயிரம்பேர்ச் செங்கண்
கரியானைக் கைதொழுதக் கால்"

(பொய்கையாழ்வார்)

திருவிழாக்கள்: ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் பிரம்மோற்சவம் - பெருவிழா பத்து நாட்கள் வரையில் நடைபெறும். பெருமாள் பல வாகனங்களில் புறப்பட்டுக் காட்சி தருவர். ஓர் நாளில் பெருமாள் மோகினிக் கோலத்துடன் உலா வருவர். 10-ம் நாளில் விசாகதினத்தில் தேரோட்டம் நிகழும். இறுதி நாளில் திருப்பாற்கடலில் தீர்த்தவாரி நிகழும்.

மாதவிழாக்கள்: ஆடிமாதத்தில் ஓர் நாள் ஆடிப்பூர விழாவும், ஆவணியில் ஸ்ரீ ஜெயந்தி உற்சவமும், ஐந்து நாட்கள் திருப்பவித்ர உற்சவமும், பௌர்ணமி நாளில் கருட சேவையும் நிகழும். இம்மாதத்தில் திருவாதவூர் மாணிக்க வாசகர் ஆவணிமூல விழாவிற்கு மதுரைக்குச் செல்லும்போது இக் கோவிலுக்கு வெளியிலுள்ள பதினறு கால் மண்டபத்தில் தங்கி ஆராதனை பெற்றுச் செல்வர். புரட்டாசியில் நவராத்திரி விழா ஒன்பது நாட்கள் நடைபெறும். 10-ம் நாளில் விஜய தசமி தினத்தில் பெருமாள் குதிரை வாகனத்தில் புறப்பட்டு உலா வருவர். கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நாளில்

Q422:38.21193 N64

சொக்கப்பானை கொளுத்தப்படும். மார்கழி மாதத்தில் திரு அத்யயன உற்சவம் நிகழும். பகல்பத்து விழா பத்து நாட்கள் நடைபெறும். இராப்பத்து முதல் நாளில் வைகுண்ட ஏகாதசி உற்சவம் நிகழும். அன்றைக்குக் கொண்ட கோவிலில் சேஷ சயனக் காட்சியும், விசுவரூபக் காட்சியும் நிகழும். பிறகு பெருமாள் புறப்பட்டுப் பரமபத வாயில் வழியே சென்று ஆழ்வாருக்குச் சேவை சாதித்துத் திரும்புவர்.

மறுநாள் முதல் இராப்பத்து உற்சவம் நிகழும். ஓர் நாளில் பெருமாள் அமிர்தமோகினி திருக்கோலங் கொண்டு எழுந்தருள்வர். 10-ம் நாள் மாலையில் பெருமாள் பல்லக்கில் புறப்பட்டு உலா வருவர். இரவில் புறப்பட்டு நம்மாழ்வாருக் குச் சேவை சாதித்து மீள்வர். இந்த உற்சவத்தில் ஆழ்வார்கள் பாடிய நாலாயிரப் பிரபந்தப் பாடல்கள் முழுவதும் அத்யயனம் செய்யப்பெறும். இம்மாதம் முழுவதும் விடியற் காலத்தில் திருப்பாவை — திருவெம்பாவை — திருப்பள்ளி யெழுச்சிப் பாடல்கள் இசைத்தட்டுகள் மூலம் ஒலிபரப்பப்படும்.

தை மாதத்தில் பொங்கலும் கனு உற்சவமும் நிகழும். மாசிமாதம் பௌர்ணமி நாளில் கஜேந்திரமோட்ச உற்சவம் ஸ்ரீ நரசிங்கப் பெருமாள் கோவிலிலும் நிகழும். அன்றைக்குக் காலையில் பெருமாள் யானைமலை நரசிங்கப் பெருமாள் கோயிலுக் குச் சென்று தங்கி, மாலையில் மோகினி கோலத்துடன் உலா வந்து, இரவில் கருட வாகனத்தில் தோன்றி கஜேந்திர ஆழ்வாருக்கு மோட்சம் கொடுத்து மறுநாள் காலையில் திருமோகூர் திரும்புவர்.

111812

பங்குனி மாதம் உத்திர நாளில் ஸ்ரீ காளமேகப் பெருமா ளுக்கும், மோகனவல்லித் தாயாருக்கும் திருக்கல்யாண உற்சவம் நிகழும். இரவில் புஷ்பப்பல்லக்கில் எழுந்தருள்வர். மறுநாள் மாலையில் திருப்பாற்கடல் தீர்த்தத்தில் தெப்பவிழா நிகழும். ஸ்ரீ காளமேகப் பெருமாள் ஸ்ரீதேவி பூதேவி சமேத ராய் ஆதிசேஷத் தெப்பத்தில் எழுந்தருளிக் காட்சி தருவர். பக்திப்புணை கொண்டு பரமனை அடைய வேண்டும் என்பதைக் குறிப்பதாகக் கூறுவர். சித்திரை மாதத்தில் உடையவர்

உற்சவம் பத்து நாட்கள் வரையில் நடைபெறும். உடையவர்–இராமானுஜர் இவருக்கு இளையாழ்வார். லக்ஷ்மண முனி, எம்பெருமானர், எதிராஜர், பாஷியகாரர் முதலிய பெயர்களும் உண்டு. இவருக்குத் தனிச் சந்நிதியும் கோவிலில் உள்ளது.

11. கல்வெட்டுக்கள்

இக் கோவில் உள் மண்டபத்திலும், யானைமலை நரசிங்கப் பெருமாள் கோவில் மண்டபத்திலும் சேர்த்து 14 கல்வெட்டுக்கள் உள்ளன. அவை சர்க்காரால் நகல் எடுக்கப்பட்டுத் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் 1905-ம் ஆண்டில் 63 முதல் 76 வரை உள்ள எண்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அக்காலத்தில் திருமோகூர்ப் பகுதி, ராஜேந்திர சோழவள நாட்டைச் சேர்ந்ததாகவும், இவ்வளநாடு ராஜராஜ பாண்டி நாட்டின் ஓர் பிரிவாகவும் சொல்லப்படுகிறது. தென் களவாளி நாடு—வேம்பைக்குடி நாடுகளும் கூறப்பட்டுள்ளன. யானைமலையிலுள்ள நரசிங்கப் பெருமாளுக்கு நரசிங்கப்பெருமானடிகள், நரசிம்ம ஆழ்வார் என்ற பெயர்களும், நரசிங்க மங்கலம், இரணிய முட்டம் என்னும் ஊர்களும் சொல்லப்பட்டுள்ளன. கோயில் பூஜைகளுக்கு நிலங்களும், விளக்கெரிக்க ஆடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டுக்களின் விவரங்கள் பின்வருமாறு :—

1 — 63 — 1905. யானைமலை நரசிங்கப் பெருமாள் கோவிலுக்குச் செல்லும் வாயிலின் இடதுபுறத்துப் பாறையில் வட்டெழுத்தில் உள்ளது. மதுரை கொண்ட சோழமன்னர் பரகேசரிவர்மனின் 33-வது ஆட்சியாண்டில் ஏற்பட்டது. மன்னனிடம் அதிகாரியாயிருந்த அருநிதிக் கலியன் பெயரால் கலியனேரி என்னும் குளம் வெட்டப்பட்டதும், கீழ் இரணிய முட்டம், நரசிங்கமங்கலம் என்னும் கிராமங்களும், நரசிங்கப் பெருமாள் கோவிலும் இக்கல்வெட்டில் கூறப்பெற்றுள்ளன.

2—64. ஷை இடத்தில் உள்ளது. சோழபாண்டியன் - ஜடாவர்மன் என்னும் உடையார் சுந்தரசோழ பாண்டிய தேவனது 21-வது ஆண்டில் ஏற்பட்ட தமிழ்க் கல்வெட்டு.

சந்நிதியில் விளக்கெரிக்க ஓர் ஆடு வழங்கியது. கீழ் இரணிய முட்டம், திருவாணமலைகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

3—65. ஷை கோயிலின் நுழைவாயிலுக்கு வடபுறம் பாறையில் உள்ள சிதைந்த கல்வெட்டு, திருவாண மலையிலுள்ள கீழ் இரணியமுட்டம் - நரசிம்மாழ்வார் கோயிலுக்கு ஓர் விளக்கு வழங்கப்பெற்றது. ராஜராஜ பாண்டி நாட்டின் ஓர் பிரிவான ராஜேந்திர சோழவள நாட்டைச் சேர்ந்ததாக இரணியமுட்டம் கூறப்பட்டுள்ளது.

4—66. ஷை கோயில் மண்டபத்தின் நுழைவாயிலில் வட்டெழுத்தில் உள்ள சிதைந்த கல்வெட்டு. சோமாசி பரிவிராஜகர் என்னும் துறவியைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.

(5 to 12) - (67-74) ஷை கிராமத்தில் சிற்பங்கள் நிறைந்த ஓர் பாறையில் வட்டெழுத்திலும் தமிழிலும் உள்ளது. நரசிங்க மங்கலம், அஜாநந்தி, தென்களவாளி நாடு, பொற்கோடு, தினைக்களத்தார், வேம்பைக்குடி நாடு இவைகளைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.

13—75 திருமோகூர் காளமேகப் பெருமாள் கோயில் உள்மண்டபத்தின் தென் சுவரில் தமிழில் உள்ளது. சகம் 1473-ல் விரோதிகிருது ஆண்டில் ஏற்பட்டது. பசவண நாயக்கர் - திம்மப்ப நாயக்கரால் கோயிலுக்கு நிலம் வழங்கப் பட்டது.

14 — (76 - 1905) ஷை இடத்திலுள்ளது; ஷை 75 கண் கல்வெட்டைச் சேர்ந்தது.

75 - 76 எண்ணுள்ள திருமோகூர்க் கோவிலில் உள்ள கல்வெட்டின் நகல் இத்துடன் சேர்க்கப்பெற்றுள்ளது. திருமோகூர் ஸ்ரீ காளமேகப் பெருமாள் கோவில் கொண்ட கோவில் மண்டபத்தின் வெளி தென்புறம் அடைந்திருக்கிற கல்வெட்டு வாசகங்களின் விபரம் பின் வருமாறு:—

மேல்புறம்

1. சொஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1473-க்கு மேல் செல்லா நின்ற விரோதிகிருது ஸம்வத்ஸரத்து உத்தராயணத்தில் ஹேமந்தருதுவில் மகாஞாயிற்று பூர்வ பக்ஷத்து, துதியையும், பௌமிய வாரமும் சிராவண நக்ஷத்திரமும் சித்த யோகமும், கௌலவகரணமும் பெற்ற மகாசங்கிரம புண்ணிய காலத்தில் பெருமாள் காளமேகம், பள்ளிகொண்ட பெருமாள், சிரமசாந காரியத்துக்கு கடவேனும், ஸ்தான சமயத்தில் உள்ள வாகேனும், விஸ்வநாயக்க திம்மப்ப நாயக்கருக்கு பெருமானுர் திருவுள்ளம் பற்றித் திருமுகப்படிக்கு கொடுத்த ஸ்தானி வினியோகப் பட்டயம்.

2. முன்னுல் தாம் பெருமாள் காளமேகம், பள்ளி கொண்ட பெருமாளுக்கு நித்திய நைவேத்தியம் காலசந்தியில் தத்தியோதன அவசரத்துக்கு மேல் இரண்டாம் அவசரம் உம்மடையபுரல் கட்டளையிட்டு இந்த அவசரத்துக்கு மேல், திருவிளையாட்டமாக விட்ட கிராமங்களாவன :—

மதுரை மண்டலத்து சீமையில் (கல்வேலி நாட்டு,) நாலு கோட்டை சீமையில் திருவுடையாட்டமாக பெருமாளுக்கு நீர்சமர்ப்பிவித்த மாண்குழி, மாண்குழி கிராமங்களும், இது முட்பட்ட நான்கெல்கையும், நான்கெல்கைக்குட்பட்ட ஏந்தல்களும், உள்ளிட்ட நன்செய், புன்செய், நத்தம், படுகை, மாவடை, மரவடை, குடிக்கடகை, தீர்வை காணிக்கை, தரிசுகடமை, படிவரி, பாசிவிலே, மற்றும் நாளிது வரை நடந்துவருகிற சமஸ்த பிராப்தியும் உள்பட்ட பொன்முதல்களைப் பொன்முப்பத்தாறும் நெல் முதல் எட்டுப்படிகளாலான நானூற்று அன்பதின்கலமும், இந்த பொன்னுக்கும் நெல்லுக்கும், இவர் பெருமாளுக்கும் நித்திய நைவேத்தியம், கால சந்தியில் ததியோதன அவசரத்தின்மேல் இரண்டாம் அவசரம், இவர் பேரால் கட்டளையிடுகையில் நாள் ஒன்றுக்கு அவசரம் ஒன்றுக்கு தூணிபதக்கு, அமுதுபடிகலென முக்குருணி நெல்லாகவும், இந்த நெய்வேத்தியத்துக்கு மேல் வெச்சது, கரியமுது, நெய்யமுது, சம்பாரம், திருப்பணிமகளம்

ஒரு பணம் ஆகவும், ஆக இந்த வகையில் வருஷம் ஒன்றுக்கு கூடியது நெல் நானூற்று ஐம்பதின் கலத்துக்கும், பொன் முப்பத்தாறுக்கும், இந்தப்படி கட்டளையிட்டு திருவிளையாட்ட மாக இந்த கிராமங்கள் இந்த பெருமாளுக்கு சமர்ப்பிவித்த படியினாலே, இவருக்கு பெருமாள் காணியாக்ஷியாகி திருவுள் ளம் பற்றினபடி தின சிலவுக்கு பெருமாள் அமுது செய்த பிரசாதத்தில் இவருக்கு நாள் ஒன்றுக்கு அமுது படிப்படியே விட்டவன் விமுக்காடுகுருணி நாழி பிரசாதமும் பெருமாள் மாடத்திரு வீதியிலே ஒரு மனையும் பெருமாள் திருவுள்ளம் பற்றிய வெளி அவசரம் தானாதி விளிமயவிக்கிரயங்களுக்கு அனுபவித்துக் கொள்ளவும் நம்பப்படுவதற்கு நாங்களே நடத்தவரக்கடவோமாகவும்.

கீழ்புறம்

ஸ்ரீ சென்ம சகாப்தம் 1473, மேல் செல்லாநின்ற விரோதி கிருது ஸம்வத்ஸரத்து உத்தராயணத்தில் ஹேமந்தருதுவில் மகா ஞாயிற்று, பூர்வபக்ஷத்து துதியையும் பௌமிய வாரமும் சிராவண நக்ஷத்திரமும், கௌலவகரணமும் பெற்ற மகாசங் கிரம புண்ணிய காலத்தில் நம் கொண்ட கோவில் சதுர்முகன் பீடத்தில், நாமும் நம் பெண்டுகளும், ஒழுக்கமாகயிருக்கையில் நம் வீட்டில் குடவர், சேரவர், பூவிடுவர், தலையிடுவார், அனுக்கர், கணக்கியர் மற்றும் நம் காரியத்துக்கு கமர் எல்லோ ரும் வந்து நமக்கு சொல்லுகையில் நம் தாஸனை வஸவது நாயக்க திம்மப்ப நாயக்கர் நமக்கு முன்னாளில் நித்திய நைவேத்திய திருவாராதனத்து கொடுத்த கிராமங்களாவன :-

மதுரை மண்டல சீமையின் கல்வேலி நாட்டு நாலு கோட்டை சீமையில் திருவுடையாட்டமாக நமக்கு கொடுத்த மாண்குழி, மாண்குழி கிராமங்களும், இதுக்குட்பட்ட நான் கெல்கைகளும், நான்கெல்கைக்குட்பட்ட ஏந்தல்களும், நன்செய், புன்செய், நத்தம், படுகை, மாவடை, மரவடை, குடிக்கிடகை, காரை, காணிக்கை, தரிக்கடமை பழவழிபாசி விலை, மற்றும் நாளது வரையும் நடந்து வருகிற சமஸ்தப் பிராப்தியும் உட்பட பொன் முதல் கலம்பொன் முப்பத்தாறு,

நெல் முதல் எட்டுப் படிக்காலாள் நானூற்றுப் பதின்கலத்துக்கு நித்திய நைவேத்தியத்துக்கு காலசந்தியில் ததியோதின அவசரத்தின் மேல் இவருடைய உபயமாக கட்டளையிட்டது.

நாள் ஒன்றுக்கு ததியோதன அவசரத்துக்குமேல் இரண்டாம் அவசரத்துக்கு இவன் பேரால் அவசரமாக ஆறு மரக்கால் அமுது படிக்கு கலனே முக்குருணி நெல்லாகவும், இந்த ஆறு மரக்கால் அமுதுபடி நெய்வேத்திய கட்டளைக்கு கரியமுது, நெய்யமுது, சம்பாரம், தயிரமுது, எரிதுரும்பு, திருப்பணுஞ்சுமையார்கள் கூலி, மற்றும் எப்பேர்பட்ட செலவு முள்பட இந்த அவசரம் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு பணம் ஒன்ருகவும், இந்தப்படி வருஷம் ஒன்றுக்கு நெல் இருநூற்று பதின் கலமும் பொன் முப்பத்தாறும் இந்தப்படியே கட்டளையிட்டு திருவிளையாட்டமாக இந்த கிராமங்கள் விட்டபடியால், இவனுக்கு நாம் கட்டளையிட்டு கொடுத்த விட்டவன் விழுக்காடு சிலவுகளைச் சேர்த்தல் நாள் ஒன்றில் இவன் அவசரமும், தூணி பதக்கு அமுதுபடி குருணி பாலுழிச் சோறும் நம்பதியில் மாடத்திரு வீதியில் மனையும், நாம் இந்த திவசத்தில் உனக்கு கட்டளையிட்டு தந்தபடியினுல், ஆச்சந்திரைகள் தூக்கியாகவும் புத்திர பௌத்திர பாரம்பரையாகவும் தானுதி விளிமய விக்கிரயங்களுக்கு யோக்கியமாக அனுபவித்துக்கொள்ளவும்.

இப்படிக்கு திருவாய் மொழிந்தருளியபடிக்கு திருமந்திர ஓலராயகம் காளமேகப் பிரியன் எதிராஜதாசன் கையெழுத்து.

12. வருமானமும் சொத்துக்களும்

இக் கோவிலுக்குச் சுமார் 45 ஏக்கர் நன்செய் நிலங்கள் உள்ளன. இவைகள் திருமோகூர், இலந்தைக்குளம், பனைக்குளம் முதலிய கிராமங்களில் உள்ளன. நிலங்கள் குத்தகை மூலமாய் சுமார் ஆருயிரம் ரூபாயும், சர்க்கார் மோகினித் தொகையாக மூவாயிரம் ரூபாயும், அர்ச்சனை, உண்டியல், காணிக்கை, கல்யாணம் முதலியவைகளின் மூலம் சுமார் இரண்டாயிரம் ரூபாயும் ஆகமொத்தத்தில் ஆண்டுதோறும்

சுமார் பதினேராயிரம் ரூபாய் வருமானம். சுமார் பதினெட்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள திருவாபரணங்களும்; இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள வெள்ளிப்பாத்திரங்களும் உள்ளன. மர வாகனங்களும் உள்ளன. இக் கோவிலில் கல்யாணங்கள் நடத்தப்படுகின்றன. ஓர் கல்யாணத்திற்கு ரூ. 5 (ஐந்து ரூபாய்) கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அர்ச்சனைக்கு நான்கணு அல்லது 25 காசும், சகஸ்ராம அர்ச்சனைக்கு 10 அணு அல்லது 62 காசும் வசூலிக்கப்படுகின்றன.

13. நிர்வாகம்

இக்கோவிலின் நிர்வாகம் 1897-ஆம் ஆண்டிலிருந்து மதுரை வட்டம் தேவஸ்தானக் கமிட்டியின் மேற்பார்வையில் இருந்து வந்தது. 1948-ஆம் ஆண்டிலிருந்து சென்னை அறநிலையப் பாதுகாப்புத் துறையின் (Hindu Religious and charitable Endowments) நேர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. அறநிலையத்தாரால் நியமிக்கப் பெற்ற நிர்வாக அதிகாரியும் டிரஸ்டிகளும் கோவில் காரியங்களை கவனித்து வருகிருர்கள்.

14. புராண வரலாறுகள்

மோகன க்ஷேத்திரம் என்னும் திருமோகூர்க் கோவிலின் பெருமைகள், மாத்ஸ்ய புராணம், பிரம்மாண்ட புராணங்களில் கூறப்பட்டிருந்ததைத் தொகுத்து மோகன க்ஷேத்திர மகாத்மியம் என்ற பெயரில் வடமொழியும், தமிழுரையும் சேர்த்துத் தேவஸ்தானத்தில் ஓர் ஸ்தல புராணம் முன்னர் வெளியிடப் பட்டது. நாரத முனிவருக்கு மார்க்கண்டேய முனிவர், மோகன க்ஷேத்திரத்தின் பெருமைகளைக் கூறுவதாகச் சொல்லப்பட்டுள்ளது. அந்த மகாத்மியத்தின் கதைகளைத் தழுவிச் சில வரலாறுகள் சுருக்கமாகக் கூறப்படும்.

1. திருமால் தேவர்களுக்கு அமிர்தம் அளித்தது.

ஒரு காலத்தில் இந்திரன், பிரமன் முதலிய தேவர்கள் பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமனிடம் சென்று

சரணமடைந்து அமிர்தம் பெரும்பொருட்டு திருமாலின் திவ்ய குண விசேடங்களைப் பலபடியாகப் புகழ்ந்தார்கள். பகவான் அவர்களுக்குக் சேவை தந்து அமிர்தங் கொடுப்பதாக அருள் செய்து மறைந்தார். பின்பு தேவதேவரான மதுசூதனர் புருஷரூபதாரியாய்த் தேவர்களின் நன்மையின் பொருட்டு மந்தர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிருகவும், கொண்டு ஆயிரம் கைகளால் பாற்கடலைக் கடைந்தார். தாமே ஆமை வடிவத்துடன் மந்தரமலையைத் தாங்கினுர். பாற்கடலைக் கடையும்போது முதலில் காளகூட விஷம் உண்டாயிற்று. அவ்விஷத்தை உலகக்ஷேமத்தின் பொருட்டுப் பரமசிவன் உட்கொண்டு நீலகண்டன் எனப் பெயர்பெற்ருர்.

பின்பு பாற்கடலினின்றும் உச்சை சிரவம் என்னும் குதிரையும், கற்பக விருட்சமும், காமதேனுப் பசுவும், ஐராவதம் என்னும் யானையும், கௌஸ்துப மணியும் சந்திரனும், அகல்யையும், லட்சுமியும் உண்டானுர்கள். குதிரையையும், யானையையும், கற்பகமரத்தையும் தேவேந்திரனும், அப்சரப் பெண்களைத் தேவர்களும், காமதேனுவை வசிட்டரும், அகல்யையை கௌதமரும், காளகூடத்தையும் சந்திரனையும் பரமசிவனும், கௌஸ்துப மணியையும், இலட்சுமியையும் திருமாலும் ஏற்றுக்கொண்டார்கள். பிறகு தேவர்கள் விரும்பிய படி அமிர்தம் உண்டாயிற்று. அமிர்தத்தைப் பெறும் பொருட்டுத் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் போர் நேரிட்டது. போரின் கடுமையால் பூமி நடுங்கியது. திக்குகளில் எதிரொலி எழுந்தது. எட்டுத்திசை யானைகளும் துன்பப் பட்டன. ஆதிசேடனும் வருந்தினுன்.

அப்போது தேவர்கள் பிரார்த்திக்கத் திருமால் மோகினி வடிவங்கொண்டு எல்லோரையும் மோகிக்கும்படி செய்து, அசுரர்களை வஞ்சித்துத் தேவர்களுக்கு அமிர்தம் வழங்கினுர். தேவர்களின் வடிவத்தில் அமுதம் பெற்ற ராகு, கேதுக்களின் தலைகளைத் திருமால் சேதித்தார். திருமால் மோகினி வடிவத்துடன் அமிர்தத்தை தேவர்களுக்கு வழங்கிய இடமே மோகன க்ஷேத்திரமாகச் சொல்லப்படுகிறது. பாற்கடலில் துளி விழுந்த இடம் திருப்பாற்கடல் தீர்த்தமாக விளங்குகிறது.

பக்கத்தில் பகவான் பாம்பணையில் பள்ளிகொண்டுள்ளார். வைகுண்ட ஏகாதசிக்கு முன்னுளில் திருமால் மோகினி அவதாரங்கொண்டு தேவர்களுக்கு அமிர்தம் வழங்குவதால் சிறப்பாகப் போற்றப்படுகிறது. விஷ்ணு பக்தியே அமிர்த மாகச் சொல்லப்படுகிறது.

"மிக்க பயத்தை விளைவிப்பதான சம்சாரமாகிய கொடுங் காட்டில் ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம் ஆதிதெய்விகம் என்னும் தாபத்திரயங்களாகிற அக்கினிச் சுவாலையினுல் கொளுத்தப்பட்டு எப்போதும் பரிதவித்துக் கொண்டிருக்கும் மனிதர்களுக்கு விஷ்ணு பக்தியாகிய அமிர்தக் கடலையன்றி வேறு புகலிடம்ஏது"

(க்ஷேத்திர மகாத்மியம்)

2. திருமால் திருமோகூருக்கு எழுந்தருளியது

ஆதியில் மகாவிஷ்ணு திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட கோலத்தில் இருந்தபோது, பிரமன் முதலிய தேவர்கள் அவரை அர்ச்சை நிலையில் ஆராதிக்க வேண்டிப் பிரார்த் திக்கவே, தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி திருமால் பாற்கடலினின்றும் புறப்பட்டுப் பெரிய திருவடியான கருடன் மேல் அமர்ந்து மோகன க்ஷேத்திரமாகிய இத்தலத்தில் ஸ்ரீ காளமேகப் பெருமாளாக எழுந்தருளி நின்ற கோலத்தில் காட்சியளிக்கிருர். பிரமன் தேவதச்சனை விசுவகர்மாவைக் கொண்டு ஓர் அழகிய கோவிலை நிர்மாணித்தான். பல மண்டபங்களையும், பிரகாரங்களையும் கட்டுவித்துச் சதுர்முக பீடமுள்ள விமானத்தையும் ஏற்படுத்தினுன். கந்தர்வர் — கின்னரர் — சாரணர் — வித்தியாதரர் என்பவர்களாலும், நாரதர், தும்புரு முதலிய முனிவர்களாலும் சாவித்திரி, காயத்திரி, சரஸ்வதி முதலியவர்களாலும் வியாபிக்கப்பட்ட தாய் அவ்விமானம் விளங்கியது. வேண்டும் பொருள்களெல் லாம் நிறைந்த ஓர் நகரத்தையும் உண்டாக்கினுன்.

ஓர் வைகாசி மாதத்தில் பிரமன் புதிதாய் அமைக்கப்பெற்ற விமானத்தில் சாநித்தியமாய் எழுந்தருள வேண்டுமென்று

பிரார்த்திக்க ஸ்ரீ காளமேகப் பெருமாள் கருட வாகனத்தி லிருந்து இறங்கி நித்திய சூரிகளால் சூழப்பட்டவராய் எழுந் தருளிக் காட்சி கொடுத்தார். பிரமன் முதலிய தேவர்கள் சேவித்து மகிழ்ச்சியடைந்தார்கள்.

பிரமன் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட ஓர் வெண் கொற்றக் குடையை அளித்துத் திருவிழாவையும் நடத்தி வைத்தான். தேவேந்திரன் சந்திரனைப் போன்ற வெண் சாமரங்களைக் கொடுத்தான். சந்திரன் திருவாலவட்டம் சேவித்தான். பகவான் ஸ்ரீ காளமேகப் பெருமாளாகத் தேவ கணங்களால் துதிக்கப்பட்டவராய்ப் பல கீத வாத்தியங்கள் முழங்கச் சதுர்முக விமான பீடத்தில் எழுந்தருளித் தன்னை வழிபடும் பக்தர்களுக்கு அந்நாள் முதல் கருணை மழையைப் பொழிந்து வருகிறார்.

முன்னாளில் பிரமன் நடத்தி வைத்த பெருவிழாவைத் தழுவி ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் பிரம்மோற்சவம் — பெருவிழா நடைபெற்று வருகிறது.

"தாளடைந்தோர் தங்கட்குத்தானே வழித்துணையாம்
காளமேகத்தைக் கதியாக்கி—மீளுதலாம்
ஏதமிலா விண்ணுலகி லேகவெண்ணும் மாறனெனக்
கேதமுள்ள தெல்லாம் கெடும்"

(மணவாள மாமுனிகள்)

15. துதிப்பாடல்கள்

திருவாய்மொழி 10-ஆம்பத்து முதல்திருவாய்மொழி: தாளதாமரை.

தாளதாமரைத் தடமணிவயல் திருமோகூர்
நாளுமேவி நன்கமர்ந்துநின் றசுரரைத்தகர்க்கும்
தோளும்நான்குடைச் சுரிகுழற் கமலக்கட்கனிவாய்க்
காளமேகத்தையன்றி மற்றொன்றிலங்கதியே. (1)

இலங்கதிமற்றொன்றெம்மைக்குமீன் தண்டுழாயின்
அலங்கலங்கண்ணியாயிரம் பேருடையம்மான்
நலங்கொள் நான்மறைவாணர்கள் வாழ்திருமோகூர்
நலங்கழலவனடிநிழல்தடமன்றியாமே. (2)

அன்றியாமொருபுகலிடமிலமென்றென்றலற்றி
நின்றுநான்முகன் அரனெடுதேவர்கள் நாட
வென்றிம்மூவுலகளித்துழல்வான் திருமோகூர்
நன்றுநாமினிநணுகுதும் நமதிடர்கெடவே. (3)

இடர்கெட எம்மைப்போந்தளியாய் என்றென்றேத்திச்
சுடர்கொள்ஜோதியைத் தேவரும்முனிவரும்தொடரப்
படர்கொள் பாம்பணைப்பள்ளிகொள்வான் திருமோகூர்
இடர்கெடஅடிபரவுதும் தொண்டீர்வம்மினே. (4)

தொண்டீர்! வம்மின் நம்சுடரொளியொருதனிமுதல்வன்
அண்டமூவுலகளந்தவன் அணிதிருமோகூர்
எண்டிசையும்ஈன்கரும்பொடு பெருஞ்செந்நெல்விளையக்
கொண்டகோயிலை வலஞ்செய்திங்காடுதுங்கூத்தே. (5)

கூத்தன்கோவலன் குதற்றுவல்லசுரர்கள்கூற்றம்
ஏத்தும் நங்கட்கும் அமரர்க்கும் முனிவர்க்கும் இன்பன்
வாய்த்த தண்பணைவளவயல்சூழ்திருமோகூர்
ஆத்தன் *ரமரையடியன்றிமற்றிலம்அரணே. (6)

மற்றிலம்அரண் வான்பெரும்பாழ் தனிமுதலாச்
சுற்றும்நீர்படைத்ததன் வழித்தொன்முனிமுதலா
முற்றுந்தேவரோ டுலகுசெய்வான்திருமோகூர்
சுற்றிநாம்வலஞ்செய்ய நம்துயர்கெடும்கடிதே. (7)

துயர்கெடும் கடிதடைந்துவந்தடியவர்தொழுமின்
உயர்கொள்சோலை ஒண்டடமணியொளிதிருமோகூர்
பெயர்களாயிர முடையவல்லரக்கர் புக்கழுந்தத்
தயரதன்பெற்ற மரகதமணித் தடத்தினையே. (8)

மணித்தடத்தடி மலர்க்கண்கள் பவளச்செவ்வாய்
அணிக்கொள் நாற்றடந்தோட்டெய்வம் அசுரரையென்றும்
துணிக்கும்வல்லரட்டன் உறைபொழில் திருமோகூர்
நணித்துநம்முடைநல்லரண் நாமடைந்தனமே. (9)

நாமடைந்த நல்லரண்நமக்கென்று நல்லமரர்
தீமைசெய்யும் வல்லசுரரை அஞ்சிச்சென்றடைந்தால்
காமரூபங்கொண்டு எழுந்தளிப்பான் திருமோகூர்
நாமமேநவின்றெண்ணுமின் ஏத்துமின்நமர்காள். (10)

ஏத்துமின்நமர்காள் என்றுதான் குடமாடு
கூத்தனைக் *குருகூர்ச்சடகோபன் குற்றேவல்கள்
வாய்த்தவாயிரத்துள் இவைவண்திருமோகூர்க்கு
ஈத்தபத்திவை யேத்தவல்லார்க் கிடர்கெடுமே. (11)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

(நம்மாழ்வார்)

"வாயான்மலர்கோதி வாவிதொறும் மேயுமோ
மேயாமல் அப்பால் விரையுமோ—மாயன்
திருமோகூர் வாயின்று சேருமோ நாளை
வருமோகூர் வாயன்னம் வாழ்ந்து"

(பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்)

(அன்னத்தை தூதுவிடுத்த தலைவி அதனைக்குறித்து ஐயுறுதல்)

"தலைவனைப் பிரிந்த தலைவி பிரிவாற்றாது வருந்தும் போது திருமோகூரைச் சார்ந்த மருத நிலத்து வாழ்கின்ற அன்னப் பறவையை நோக்கி 'எனது நிலைமையை என் தலைவனான காளமேகப் பெருமாள் பக்கம் சொல்லுதற்கு எனக்குத் தூதாக வேண்டும்' என்று வேண்டி விடுத்து தனது ஆற்றாமை மிகுதியால் 'நான் தூது விடுத்த அன்னம் என்னை மறந்திட்டுத் தன் காரியத்தைச் செய்யுமோ? அல்லது என் காரியத்தைச் செய்யுமோ' என்று ஐயுற்றுக் கூறியது இது.

ஆசிரியரது ஞானக்கண்ணுக்கு இலக்கான எம்பெருமான் மறைந்த அளவில், அவனது நிரந்தரானுபவத்தையும் பெற விரும்பி ஆசிரியர் தமது நிலைமையை அப்பெருமாள் சந்நிதியில் விண்ணப்பம் செய்யும்படி ஆச்சாரியர்களைப் பிரார்த்தித்து அவர்கள் நமது காரியத்தைக் கைகூட்டுவிக்க வேண்டுமே என்று கவலுதல் இதற்கு உள்ளுறை பொருள். கருமமே கண்ணாயிருந்து உத்தேசித்த காரியத்தைச் சமயம் வாய்க்கும் போது தவறாது செய்து முடித்துக்கொள்வதான வெண்ணிற முள்ள அன்னப்பறவையை–சுத்த சத்துவ குணமுடைமையால் உள்ளும் புறமும் ஒக்க நிர்மல சுபாவராய், ஞானம், ஒழுக்கம் என்னும் இரண்டு சாதனங்களுடன் கூடித் திவ்ய தேசங்களில்

எல்லாம் கவலையற்று யாத்திரை செய்பவராய், தம்மையே அன்றித் தம்மையடுத்தவர்களையும் பாதுகாப்பவராய் காரியமே கருத்தாயிருந்து அதனை உரிய காலத்தில் தவறாது செய்து முடிக்கவல்ல ஆச்சாரியர் என்னத்தகும்.''

(அஷ்டப்பிரபந்த உரை)

பொன்னனை வாளரக்கனை நூற்றுவரைக்கானவப்
பொருசிலையைக் கனைகடலைப் பொன்னீன்ற
நன்மகற்காய்ச் சுரர்க்காய் ஐவருக்காய்க் காதல்
நப்பினைக்காய்ச் சானகிக்காய் நடவைக்காக
மன்னுகிரால் வடிக்கணையால் வளையால் புள்ளால்
வளங்கெழு தோள்வலியால் வானரங்களாறும்
முன்னுடல்கீறிச் சிரங்கொய்து அமரிவ்வீழ்த்து
முதலொடுங்கீண்டு இறுத்தடைந்தான் மோகூரானே.

(மாறனலங்காரம்)

பொதுப் பாடல்கள்

1. ஒளிமதி வண்ணன் என்கோ
ஒருவனென்றேத்த நின்ற
நளிர்மதிச் சடையன் என்கோ
நான்முகக் கடவுள் என்கோ
அளிமகிழ்ந்துல மெல்லாம்
படைத்தவை யேத்தநின்ற
களிமலர்த் துளவ னெம்மான்
கண்ணனை மாயனையே

(நம்மாழ்வார்)

2. குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

(திருமங்கை ஆழ்வார்)

3. பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே

(தொண்டரடிப்பொடியாழ்வார்)

ஆழ்வார்கள் முதலியோர் தனியன்கள்.

ஆண்டாள்

4. அன்ன வயல்புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம்—இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு

திருமங்கையாழ்வார்

5. வாழிபரகாலன் வாழிகலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனைவாள் வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்
தூயோன் சுடர் மானவேல்.

நம்மாழ்வார்

6. திருவழுதி நாடென்றும் தென்குருகூரென்றும்
மருவினிய வண்பொரு ளென்றும்—அருமறைகள்
அந்தாதி செய்தான் அடியிணையே எப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து.

ஆழ்வார்கள்

7. பொய்கைபூ தன்பேயார் பொன்மழிசைக்கோன்மாறன்
செய்யமதுரகவி சேரர்பிரான்—வையகமென்
பட்டர்பிரான் கோதை தொண்டர்பாதப் பொடிபானன்
கட்டவிழ்தார் வாட்கலியன் காப்பு

(பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்)

கருடன்

8. கருமுகில் தாமரைக்காடு பூத்துநீடு
இருசுடர் இருபுறத் தேந்தி ஏடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோல் கலுழன் மேல்வந்து தோன்றினன்.

அனுமான்

9. அஞ்சிலே யொன்று பெற்றான் அஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றாக ஆரியர்க்காகவேகி
அஞ்சிலே யொன்றுபெற்ற அணங்குகண்டயலாரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தான் அவனம்மை
அளித்துக்காப்பான்

(கம்பர்)

உடையவர் (இராமானுஜர்)

10. பூமன்னுமாது பொருந்தியமார்பன் புகழ்மலிந்த
பாமன்னு மாறன் அடிபணிந்துய்ந்தவன் பல்கலையோர்
தாம்மன்னவந்த இராமாநுசன் சரணாவிந்தம்
நாம்மன்னிவாழ நெஞ்சே சொல்வோமவன் நாமங்களே.

(இராமாநுஜ நூற்றந்தாதி)

மணவாளமாமுனிகள்

11. மன்னுபுகழ்சேர் மணவாள மாமுனிவன்
தன்னருளால் உட்பொருள்கள் தம்முடனே—சொன்ன
திருவாய் மொழிநூற்றந்தாதி யாம்தேனை
ஒருவா தருந்து நெஞ்சே சற்று

சேனைமுதலியார்

12. ஓங்குதுலாப் பூராடத்துதித்த செல்வன் வாழியே
ஒண்டொடியாள் சூத்திரவதி உறைமார்பன் வாழியே
தேங்குபுகழரங்கரையே சிந்தை செய்வோன் வாழியே
சேனையர்கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே.

வாழ்த்து

13. நாளும் மோகனவல்லி நலங்கொளும்
காளமேகம் கவின்பெறு கண்களும்
தோளும் மார்பும் துவரிதழும் துணைத்
தாளும் வாழி சகதலம் வாழவே.

14. பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணாஉன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு.

(பெரியாழ்வார்)

ஸ்ரீ காளமேகப் பெருமாள் சேவடி போற்றி

லலிதா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை—1.

ஸ்ரீ காளமேகப்பெருமாள் தேவஸ்தானம்

ஆராதனைகளின் காணிக்கை விவரங்கள்

விவரம்		ரூ. ந.பை.
அஷ்டோத்திரம்	...	0 — 25
சகஸ்ரநாமம்	...	0 — 62
மாவிளக்கு	...	0 — 25
தேங்காய் நைவேத்தியம்	...	0 — 09
முடி காணிக்கை	...	1 — 25
காது குத்துதல்	...	1 — 25
காவடி	...	1 — 25
கல்யாண காணிக்கை	...	1 — 00
உபநயனம்	...	7 — 00
பட்டு பரிவட்டம் - உபய உருப்படிகள்	...	1 — 00

திருமோகூர்

ஸ்ரீ பள்ளிகொண்ட பெருமாள்

7B
8-41